6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

43. வருவாய்த் துறையில் 15—2—1965-ஆம் தேதியன்று வெளியாகி, 17—2—1965-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II, பிரிவு-I பக்கங்கள் 287–290-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-I, 725, ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்- அறக் கட்டளைகள் துறையின் 13—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 226-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [(தமிழ்நாடு) 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

44. சென்னை மாநகரில் இயங்குகிற ஆட்டோரிக்ஷாக்கள், வாடகை மோட்டார் வண்டிகள் ஆகியவை இயங்கும் எல்லைப் பகுதியை வண்ண எழுத்துக்களில் வண்டிகளில் எழுதி வைப்பது தொடர்பாக, தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 23—4—1980-ஆம் தேதியிடப்பெற்ற 126-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 28—1—1980-ஆம் தேதியிடப்பெற்ற 149-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*30. 1980–81-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29, 33 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

31. 1980–81-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 18, 19 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).